# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,508 — JUNE 14, 1912.


## TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

**No. 1,314, E. P.—1912** ம் ஆண்டு ஆடிமாதம் 19 ந் திகதி, வெள்ளிக்கிழமை, பிற்பகல் 1 மணிக்கு கிழக்குமாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்கள் தனது ஆபீசில், இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற் கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டுக்கழப்பு டிஸ்திறிக்கி லிருக்கின்றன.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | ரூ. | ப. | தீரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 4,280. மண்முனைப்பற்று வடபகுதி. உரித்தாளி—முடி. | | | | | |
| 675 | கருவேப்பங்கேணி | வி. வேலுப்பிள்ளை | சிறுகாட்டுப்பூமி | 2 | 1 | 17 | 20 |
| 676 | ஷை | விலக்கப்பட்ட நிலம் | — | 0 | 1 | 21 | — |
| | | பிளான் இலக்கம் 4,303. உரித்தாளி—முடி. | | | | | |
| 752 | சத்துருகொண்டான் | சி. கணபதியும் மற்றவரும் | காட்டுப்பூமி | 4 | 3 | 0 | 15 |
| | | பிளான் இலக்கம் 4,318. உரித்தாளி—முடி. | | | | | |
| 797 | கொத்தியாபுலை | நா. சண்முகம் | வளவும் பூமியும் | 1 | 0 | 24 | 15 |
| | | பிளான் இலக்கம் 4,321. உரித்தாளி—முடி. | | | | | |
| 803 | காத்தான்குடி | கு. முகம்மதுத்தம்பி | வெம்புப்பூமி | 1 | 0 | 36 | 20 |
| 804 | ஷை | பி. முகம்மதுத்தம்பி | சிறுகாட்டுப்பூமி | 2 | 0 | 1 | 20 |
| 805 | ஷை | விலக்கிவைத்த நிலம் | — | 0 | 2 | 15 | — |
| | | பிளான் இலக்கம் 4,325. உரித்தாளி—முடி. | | | | | |
| 826 | ஆரம்பத்தை | சி. அகமதுலெவ்வை | தென்னைக்கேற்ற நிலம் | 1 | 3 | 12 | 20 |
| 827 | ஷை | விலக்கிவைத்த நிலம் | — | 0 | 0 | 31 | — |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்தீசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடம் விஞவி அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1912 ம் ஞூ ஜூன்மீ 6 ந் உ.

ஹியு. கிளிவ்வோட்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Point Pedru, Jaffna.]

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பருத்தித்துறையில் ஒரு பிரசித்த கக்கூசு கட்டுகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,926. குறிச்சி—பருத்தித்துறை.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| T 16 | மருதுநின்றதெணி | தென்னந்தோட்டம் | அப்பாக்குட்டி கணபதிப்பிள்ளை, அப்பாக்குட்டி வயிரமுத்து, முத்துவேலு பெண் கோணுத்தைப்பிள்ளை | 0 | 0 | 1·37 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் வருஷத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1912 ௵ ஆடிமாசம் 2 ௳ தேதியிலன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இயாட்பாணக் கச்சேரி,
1912 ௵ ஆனி ௴ 6 ௳.

எச். ஆர். பிரீமென்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Mahawela in Asgiri Pallasiyapattu, Matale District.]

1876 ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் யட்டாவத்த மகவலை ரேட்டை சரிக்கட்டுகிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதம படத்து இலக்கம் 6,276. குறிச்சி—மாவலை தெற்கு மாகாணத்தில் அஸ்கிறிபள்ளே சியபத்துவில்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| C 33 | அம்பகஸ்கும்பரை .. | நெல்லு வயல் .. | சாயிபு, நிசகொள்ளை ஆராச்சி .. | 0 0 6·87 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1912 ௵ ஜூலைமாசம் 10 ௳ தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு மாத்தளையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1912 ௵ ஜூன் ௴ 5 ௳.

டபிள்யு. தீ. சதேர்ண்,
உதவி அரசாட்சி ஏசன்று.

---

[Metipimbiya, Badulla District.]

1876 ம் வருஷத்து 3 ம் இலக்கச்சட்டதினது 7 ம் பிரிவின் பிரகாரம் வண்டாரவெல் வெலிமட ரேட்டுப்போட்டு முடிக்கிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதம படத்து இலக்கம் 116. குறிச்சி—மெற்றிபிம்விய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 100b | முதல் கயிலவெலஅருவ என்னப்பட்ட புதுவண்டில்ரேட்டும் காணும் .. | முதல் சோலையாயிருந்த வண்டில்ரேட்டும் காணும் .. | பளுந்தலாவ டம்வவின்ன றெட்டமாத்தையா .. | 0 0 2·5 |
| 100c | கெயில்வெலஅருவேகேன .. | சேனையும் கல்லும் .. | ஷை .. | 0 0 3·6 |
| 100d | ஷை .. | சேனையும் ஆற்றங்கரையும் .. | ஷை .. | 0 0 1·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1873 ம் வருஷத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றியசட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1912 ௵ ஆடிமாசம் 5 ௳ தேதியிலன்று 2 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1912 ௵ ஆனிமாதம் 10 ௳.

ஆர். ஏ. ஜி. பெஸ்டிங்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Kanahela, Badulla District.]

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பசறயிலிருந்து நாக்கல்லைக்குப் போகும் ஆள் பாதையை வண்டில் பாதையாக்கும் நிமித்தம் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 1,611. குறிச்சி—கனகெல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| H 16 | இலச்சிமி தோட்டம் அல்லது றெடிகொல்லவத்த .. | 19 வருஷத்து தேயிலை .. | ம. இ. சி. வி. சுப்பிரமணியம் செட்டி .. | 0 2 35·25 |
| I 16 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 27 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் வருஷத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1912 ௵ ஆடிமாசம் 5 ௳ தேதியிலன்று 1 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1912 ௵ ஆனி ௴ 6 ௳.

ஆர். ஏ. ஜீ. வெஸ்றிங்,
ஊவா மாகாணத்து அரசாட்சி ஏசண்டு.

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் வாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Kurunegala Notice No. 4,434.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டெனவுரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஞூ (ஜூன்) ஆனிமீ 14 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் தம்பதெனிகத்பத்துவைச்சேர்ந்த மயுருவதி கோறளேயில் தியதோற என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 928.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 43g | .. | தலகாமுலகேன | .. .. .. .. | 3 1 14 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட மெதபிடியேகேன, றன்கொடிபேடிதுரயலாகே கிரியா உருத்தாடும் பிடியேகும்புற; கிழக்கு-முடியால் உருத்தாடும் புஹுகாமுளகேன; தெற்கு-முடியால் விற்கப்பட்ட நாறன்கிடியவேயில்லாவ ; மேற்கு-முடியால் விற்கப்பட்ட கதரமாலியத்தேகேன.

II.—பிரதம படம் 928.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 51b | .. | ஏதண்டேகும்புறேபில்லாவ | .. .. .. .. | 0 2 36 |

எல்லைகளாவன: வடக்கு-றன்கொடிபேடிதுரயலாகே உக்குவா மானுதுரயா உருத்தாடும் ஏதண்டேகும்புற; கிழக்கு-ராஜபக்ஸ பீ. டீ. கெகுலுவவும் மற்றவர்களும் உருத்தாடும் ஏதன்டேகும்புறேவத்த; தெற்கு-தம்புகொல்லஓய; மேற்கு-முடியால் விற்கப்பட்ட ஜம்புகாகேன.

III.—பிரதம படம் 928.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 54d | .. | தன்பிடியேபில்லாவ | .. .. .. .. | 0 1 38 |

எல்லைகளாவன: வடக்கு-பண்டியாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் மீகாகும்புற ; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட தன்பிடியேபில்லாவ; தெற்கு-முடியால் விற்பட்ட போகாமுளகேன ; மேற்கு-முடியால் விற்கப்பட்ட தன்பிடியேபில்லாவ, பண்டியாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் மீகாகும்புற.

IV.—பிரதம படம் 928.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 75a | .. | பெலிகொல்லேவத்த | .. .. .. .. | 0 2 38 |
| 75b | .. | ஷை | .. .. .. .. | 0 3 3 |
| 90o | .. | பெலிகொல்லேகேன | .. .. .. .. | 0 2 2 |
| | | | | 2 0 3 |

எல்லைகளாவன: வடக்கு-213,447 ம் உருமைப்படத்திற் காணும் காணி, முடியால் விற்கப்பட்ட கன்தோரகேன ; கிழக்கு-ஓர் றேுட்டு; தெற்கு-முடியால் விற்கப்பட்ட போகாமுளகேன, முடியால் விற்கப்பட்ட போகாமுளவத்த; மேற்கு-முடியால் விற்கப்பட்ட போகாமுளவத்த, தினுகல்பேடிதுரயலாகே லெபுனுவும் மற்றவர்களும் உருத்தாடும் நாகின்னுவ.

V.—பிரதம படம் 928.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 90 | .. | கொஸ்காமுளகேன | .. .. .. .. | 2 1 6 |
| 90a | .. | அந்தரகாமுளகேன | .. .. .. .. | 0 1 2 |
| | | | | 2 2 8 |

எல்லைகளாவன: வடக்கு-தினுகல்பேடிதுரயலாகே லெபுனுவும் மற்றவர்களும் உருத்தாடும் கொகுவிலவத்தேகும்புற; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட கொஸ்காமுளவத்த, பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட கந்தேமுகலான; தெற்கு-கந்தகெதர கிராம எல்லை ; மேற்கு-தம்புகொல்ல ஓய.

VI.—பிரதம படம் 928.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 43a | .. | கறதவள்ளேகேன | .. .. .. .. | 6 1 4 |

எல்லைகளாவன: வடக்கு-ஓர் றேுட்டு, ஓர் நீரோட்டம் ; கிழகரும் தெற்கும்-ஓர் நீரோட்டம்; மேற்கு-தம்புகொல்லஓய, ஓர் றேுட்டு.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 507—509 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[Kurunegala S. O. 41—1912.]

[Kurunegala Notice No. 4,435.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஸ்ரீ (ஜூன்) ஆனிமீ 14 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கட்டுகம்புலே கத்பத்துவைச்சேர்ந்த மெதபத்து கோறளை கிழக்கில் கெலேகெதர என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் * படப்பிரதியில் விவரித்தபடியே 3 றூட்டு 2 பேட்சு விசாலமுடையதும் சாமானியமாய் கொட்டுவேபில்லாவ என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதும் 399 ம் பிரதம படத்தில் 12a ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட தளுபொதபில்லாவ; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட கல்கனத்தேகேன; தெற்கு-முடியால் விற்கப்பட்ட கலகாவவத்த; மேற்கு-பதிரன்னகெலாகே அப்புகாமி உருத்தாடும் கொடுவேகும்புற.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 509 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 42—1912.]

---

[Kurunegala Notice No. 4,436.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஸ்ரீ (ஜூன்) ஆனிமீ 14 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம்,1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில், முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலேகத்பத்துவைச்சேர்ந்த மகாகல்பொட எகொட கோறளையில் தலகின்னேகம என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 1,993.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 9942 .. | தலகின்னகமமூகலான .. .. .. .. | 18 | 1 | 0 |
| 9943 .. | தலகின்னகமகேன .. .. .. .. | 49 | 2 | 0 |
| 9944 .. | தலகின்னகமவெவ .. .. .. .. | 3 | 3 | 31 |
| | | 71 | 2 | 31 |

எல்லைகளாவன: வடக்கு-கல்கந்த கிராம எல்லை; கிழக்கு-கல்கந்தேகம கிராம எல்லை; தெற்கு-மொறனேகம கிராம எல்லை: மேற்கு-மொறனேகம கிராம எல்லை, நெபிலிக்ம கிராம எல்லை.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 510 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 43—1912.]

---

[Kurunegala Notice No. 4,437.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உருத்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஸ்ரீ (ஜூன்) ஆனிமீ 14 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலேகத்பத்துவைச்சேர்ந்த இகலவிசிதெகே கோறளையில் பத்தலகொட என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 1,178.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 2 .. | பத்தலகொடவெவ (குளம்) .. .. .. .. | 660 | 0 | 23 |
| 3 .. | ஷை .. .. .. .. | 1 | 2 | 4 |
| 5 .. | ரோட்டு .. .. .. .. | 0 | 2 | 10 |
| 6 .. | குளம் .. .. .. .. | 0 | 0 | 37 |
| | | 662 | 1 | 34 |

* இங்கிலீசின் நான்காம் பாகம் 511—512 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

எல்லைகளாவன: வடக்கு-இப்பகமுவ கிராம எல்லை; கிழக்கு-பிடிவில்ல கிராம எல்லை, கல்கடுவ கிராம எல்லை, றதாபொல கிராம எல்லை, கேனெகெதர கிராம எல்லை, மாதிகேமுதுன்துவ கிராம எல்லை, கேனெகெதர கிராம எல்லை, நாபிலிகும்புற கிராம எல்லை, மோறகொல்ல கிராம எல்லை, ரி. பி. தெல்விட உருத்தாடும் மோறகொல்லயாய, படுவத்த கிராம எல்லை; தெற்கு-படுவத்த கிராம எல்லை, இங்குருவத்த கிராம எல்லை, பதகனே கிராம எல்லை; மேற்கு-யக்கல்ல கிராம எல்லை, போறமுள்ள கிராம எல்லை, சின்கலமுதுன்துவ கிராம எல்லை, கல்கடுவ கிராம எல்லை, இப்பாகமுவ கிராம எல்லை.

II.—பிரதம படம் 1,178.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 4 | ரேட்டு | 0 0 29 |

எல்லைகளாவன: வடக்கு-மோறகொல்ல கிராம எல்லை; கிழக்கு-கோன்காகெதர கிராம எல்லை, ரி. பீ. தெல்விட உருத்தாடும் மோறகொல்லேயாய; தெற்கு-கடுலந்தே கிராம எல்லை; மேற்கு-ரி. பீ. தெல்விட உருத்தாடும் மோறகொல்லேயாய.

[Kurunegala S. O. 44—1912.]

---

[Kurunegala Notice No. 4,438.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஞூ (ஜூன்) ஆனிமீ 14 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் தம்பதெனிகத்பத்துவைச்சேர்ந்த மயுறுவதி கோறளையில் வெல்பல்ல என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 925.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 7e | கல்கொடகேன | 1 2 27 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-தியதொற கிராம எல்லை; தெற்கு-விஷேந்திர ஆசாரிகே கிரிகோரிஸ் நயிதேயும் மற்றவர்களும் உருத்தாடும் வெவகும்புற; மேற்கு-முடியால் விற்கப்பட்ட கலகொடகேன.

II.—பிரதம படம் 925.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 7f | நதுன்கொல்லகேன | 1 3 16 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உருத்தாடும் வீகேன; கிழக்கு-விஷேந்திர ஆசாரிகே கிரிகோரிஸ் நயிதேயும் மற்றவர்களும் உருத்தாடும் பகலவெல, முடியால் விற்கப்பட்ட கல்மில்லகொல்லகேன; தெற்கு-முடியால் விற்கப்பட்ட கல்மில்லகொல்லகேன; மேற்கு-முடியால் விற்கப்பட்ட கல்மில்லகொல்லகேன, விஷேந்திர ஆசாரிகே கிரிகோரிஸ் நயிதேயும் மற்றவர்களும் உருத்தாடும் அஸ்வெத்துமேகும்புற.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 513 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்குக.

[Kurunegala S. O. 45—1912.]

---

[Kurunegala Notice No. 4,439.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துபேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஞூ (ஜூன்) ஆனிமீ 14 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகமுகமாயேனும் எழுத்து மூலமாயேம் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் தம்பதெனி கத்பத்துவைச்சேர்ந்த மயுறுவதி கோறளையில் ஏதண்டேவெல என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 946.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2 | பாலுபிடியேகேன | 0 2 10 |

எல்லைகளாவன: வடக்கு-பாலுபிடியேகும்புற முதலியன (கிராமிகளுக்குரிய); கிழக்கு-முடியால் விற்கப்பட்ட பாலுபிடியேகேன; தெற்கும் மேற்கும்-கட்டுவத்தேவெல கிராம எல்லை.

II.—பிரதம படம் 946.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 4g | கோன்காமுளகேன | 0 0 27 |
| 4h | ஷை | 2 1 7 |
| | | 2 1 34 |

* இங்கிலீசின் நான்காம் பாகம் 513 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்குக.

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட பள்ளியகாவகேன, முடியால் விற்கப்பட்ட போகாமுளகேன, முடியால் விற்கப்பட்ட பள்ளியவத்த, சேருவன்கொட கிராம எல்லை; கிழக்கு-சேருவன்கொட கிராம எல்லை,; தெற்கு-சேருவன்கொட கிராம எல்லை, முடியால் விற்கப்பட்ட கோன்காமுளகேன; மேற்கு-கட்டுவத்தேவெல கிராம எல்லை.

[Kurunegala S. O. 46—1912.]

---

[Kurunegala Notice No. 4,440.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஹூ (ஜூன்) ஆனிமீ 14 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில், முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலை கத்பத்துவைச்சேர்ந்த மகாகல்பொடஎகொட கோறளையில் கனேவத்த என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 2,036.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| X 1051 | கனேவெவ (குளம்) | 1 1 20 |

எல்லைகளாவன: வடக்கு-ஓர் கற்பார், யாபத்காமியும் இன்னுமொருவரும் உருத்தாடும் தளுபொதபுருன, மேற்படியார்கள் உருத்தாடும் தளுபொதகேன, ஓர் கற்பார்; கிழக்கும் தெற்கும் மேற்கும்-முடியால் உருத்தாடும் கமேவெவே இகலகேன.

II.—பிரதம படம் 2,036.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| Z 1051*a* | வானஎல (வாய்க்காலும் நிலமும்) | 0 0 14 |
| A 1052*b* | ஷை (குளக்கட்டு) | 0 0 3 |
| | | 0 0 17 |

எல்லைகளாவள: வடக்கு-யாபத்காமியும் இன்னுமொருவரும் உருத்தாடும் தளுபொதகேன, முடியால் உருத்தாடும் திம்பிரிகாமுளபிடியகேன; கிழக்கு யாபத்காமியும் இன்னுமொருவரும் உருத்தாடும் தளுபொதகேன; தெற்கு-ஓர் குளக்கட்டு; மேற்கு-முடியால் உருத்தாடும் வானஎல (வாய்க்காலும் குளக்கட்டும்), யாபத்காமியும் இன்னுமொருவரும் உருத்தாடும் தளுபொதபுருன.

III.—பிரதம படம் 2,036.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| G 1052*a* | ரேட்டு | 0 0 18 |

எல்லைகளாவன: வடக்கு-தம்பகல்லவிலிருந்து மாகுள்மடவுக்குப்போகும் ரேட்டு, முருதலகம கிராம எல்லை; கிழக்கு-முடியால் உருத்தாடும் மீகாமுளகேன; தெற்கு-உக்குபண்டாவும் மற்றவர்களும் உருத்தாடும் பகல்தன்காபுறன; மேற்கு-முடியால் உருத்தாடும் ஓர் ரேட்டு, உக்குபண்டாவும் மற்றவர்களும் உருத்தாடும் பகலதன்காபுருன.

IV.—பிரதம படம் 2,036.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. றூ. ப. |
|---|---|---|
| H 1052*a* | ரேட்டு | 0 0 4 |

எல்லைகளாவன: வடக்கு-முழுதலகம கிராம எல்லை, களுகேனயாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் கேனலாகேகும்புற; கிழக்கு-முடியால் உருத்தாடும் ஓர் ரேட்டு; தெற்கும் மேற்கும்-களுகேனயாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் கேனயாலாகேகும்புற.

V.—பிரதம படம் 2,036.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| I 1052*c* | ரேட்டு | 0 0 10 |

எல்லைகளாவன்: வடக்கு-முருதலகம கிராம எல்லை, ஓர் ரேட்டு, றனசிங்க முதியன்செலாகே கியதுகாமி உருத்தாடும் தியகிலாம புருனவத்த, றனசிங்க முதியன்செலாகே முதியன்சேயும் மற்றவர்களும் உருத்தாடும் தியகில்மபுருனவத்த; கிழக்கு-முருதலகம கிராம எல்லை; தெற்கு-களுகேனயாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் கேனேயாலாகே புருன; மேற்கு-ஓர் குளக்கட்டு.

VI.—பிரதம படம் 2,036.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| J 1052 | கேன்யாலாகேவெவ (குளம்) | 0 1 35 |

எல்லைகளாவன: வடக்கு-டீ. எம். பண்டா கோறளை ஆறச்சில உருத்தாடும் கலவெடியபாவுலவத்த, ஓர் குளக்கட்டு; கிழக்கு-களுகேனயாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் கேனேயாலாகேபுறன, களுகேனயாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் அம்பகாமுளவத்த; தெற்கு-முடியால் உருத்தாடும் கல்வெடியாபாயுலகேன முதலியன; மேற்கு-முடியால் உருத்தாடும் கல்வெடியாபாயுலகேன, டீ. எம். பண்டாகோறளை ஆறச்சில உருத்தாடும் கல்வெடியருயுலவத்த.

VII.—பிரதம படம் 2,036.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| J 1052*b* | ரேட்டு | 0 0 0·75 |

எல்லைகளாவன: வடக்கு-ஆர். எஸ். சியதுகாமி உருத்தாடும் தியகில்மபுருன; கிழக்கு-ஓர் குளக்கட்டு; தெற்கு-டீ. எம். பண்டாகோறளை ஆறச்சில உருத்தாடும் கலவெடியபாயுலவத்த; மேற்கு-முடியால் உருத்தாடும் கலவெடியபாயுலகேன முதலியன.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 514—516 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[Kurunegala S. O. 47—1912.]

[Tenders for provisioning Jaffna Hospital.]

பின்னல் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுபத்திரிக்கு 1912 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் திகதி தொடக்கம் 1913 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டு சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையில் "ஆசுபத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1912 ம் ஞூ ஆனிமீ 18 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள்செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந்தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்படமாட்டாது.

7 சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம்பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) எவ். ஜீ. மோர்லி,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1912 ம் ஆண்டு வைகாசிமீ 29 ந் உ.

அட்டவணை.

| இடம். | | சாப்பாட்டுச்சாமான்களின் விவரம். | | முற்பணத்தின் தொகை. ரூ | | பணப்பிணையின் தொகை. ரூ. |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் ஆசுபத்திரி | .. | சமைத்த சாப்பாடு, பாலும் | .. | 200 | .. | 400 |

[Tenders for supplying Materials for Salt Stores, Jaffna.]

சாமான்கள் கொடுக்கிறதற்குக் கேள்விப்பத்திரம்.

நாற்கடகம், ஓலைப்பாய், ஓலைமடல், தேங்காய் எண்ணெய், ஆமணக்கெண்ணெய், மண்ணெண்ணெய், பனைஓலை, தும்புக்கட்டு, ஈக்குக்கட்டுக் கூட்டத்தடி, தும்புக்கயிறு, சாக்கு என்னும் இந்தச் சாமான்கள் கேட்குநேரமே யாழ்ப்பாணம் உப்புமால் சிவியாதெரு உப்பளம், தொண்டமனுர் உப்புச்குதம் ஆகிய இந்த விடங்களில் கொடுக்கிறதற்கு 1912 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் திகதி தொடக்கம் 1913 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் திகதி வரையில் ஒப்பந்தம் கேட்க விரும்புவருடைய கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

2. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியாயும் முத்திரையிடப்பட்டதாயுமிருத்தல் வேண்டும். மூலப்பிரதி வடமாகாண ஏசன்றுத்துரை அவர்களுக்கும் இணைப்பிரதி கொழும்பு அரசிறைவருமானத்தலைவர் கந்தோருக்கும் விலாசம் போட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் கேள்விக்காரன் தானாகக் கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம். இரண்டு பிரதிகளும் ஒரே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரத்தில் "Tender for supplying Materials 1912–13" என்று உறையின் இடது பக்க மேல்மூலையில் போடப்பட்டிருத்தல் வேணும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1912 ம் ஆண்டு ஆனிமாதம் 18 ந் திகதி பின்பகல் 2 மணிக்குமுன் சேரவேண்டும்.

5. கேள்விப்பத்திரம் எழுத மாதிரிக்கடுதாசி யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அந்த மாதிரிக் கடுதாசியில் எழுதாத வேறு எவ்விதப் பத்திரமும் ஏற்கப்படமாட்டாது. மாற்றங்களுக்கு கையொப்ப முதலெழுத்தக விடப்படவேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரங்கள் பிழையென விலத்தப்படும்.

6. கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டுக் காட்டினவருக்கே மாதிரிக் கடுதாசி கொடுபடும். ஒருவருடைய ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொண்டதென்று அறிவித்தல் அவர் கேட்ட நாள்தொடக்கம் பத்து நாளைக்குள் ஒப்பந்தம் ஏற்க பிணைகொடுக்க அல்லது உறுதிமுடிக்க தவறினால், கட்டின காசு கவண்மேந்துக்கு இனமாகும். அப்படித் தவறினவர் கவண்மேந்து ஒப்பந்தங் கொடுக்கப்படாதென்று விலக்கப்பட்ட ஒப்பந்தக்காரருடைய பெயர் பதியப்படும் இடாப்பில் பதியப்படுகிறதற் காளாவர். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு முடிவானவுடன் மற்றக் கேள்விக்காரருடைய காசு திருப்பிக் கொடுபடும்.

7. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான பேர் பிணை நிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அனைத்திருக்கவேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்கவேண்டும்.

8. ஒப்பந்தம் கொடுக்கும் நாளில் கொடுக்கவேண்டிய சாமான்களுக்கு மாதிரிப் பொருட்களுங் கொடுக்கவேண்டும்.

9. ஒப்பந்தத்தைச் சரியாய் ஒப்பேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேண்டும். பிணையுறுதியின் தொகையும் வேறுவித தேவையான விபரங்களும் கந்தோரில் கேட்டுக்கொள்ளலாம்.

10. மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

11. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயம்சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவண்மேந்துக்கு உண்டு.

எச். எம். எம். மூர்,
அரசாட்சி ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1912 ம் ஞூ வைகாசிமீ 13 ந் உ.

[Tenders for Lease of Rubber Trees in Hospital Compound at Koslanda, Badulla District.]

*கொஸ்லாந்த ஆசுப்பத்திரிக்குரிய நிலத்தில் நிற்கும் றப்பர் மரங்களின் குத்தகையை விற்பதற்காய் ஊவா மாகாண ஏசண்டுத்துரை அவர்களால் 1912 ம் ௵ சூனிமீ 28 ந் திகதி, வெள்ளிக்கிழமை மத்தியானம் 12 மணி நேர வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—*

(*a*) ஒரு வருஷத்துக்கு.
(*b*) மூன்று வருஷத்துக்கு.

*கேள்விப்பத்திரம் போடுபவர்கள் அந்நிலத்திலுள்ள தேயிலைச்செடிகளை வேரோடு பிடுங்கி நிலத்தைத் துப்பரவாய் வைத்திருப்பதற்கும், மரங்களுக்குப் பழுது நேரிடா வண்ணமும் எத்தனங்கள் எடுக்க வேண்டியது.*

*கேள்விப்பத்திரத்தின் மேல் உறையின் இடது மூலையில் மேற் காட்டியபடி ஒரு வருஷத்துக்கோ அல்லது மூன்று வருஷத்துக்கோ என்றும் ஆசுப்பத்திரியினுடைய பெயரும் எழுதப்பட்டிருக்க வேண்டியது.*

*அநுகூலமான கேள்விக்காரன் கேள்வித் தொகையை முற்பணமாய் வதுளைக்கச்சேரியில் கட்ட ஆயத்தமாயிருக்க வேண்டியது.*

சீ. டபிள்யு. விக்கரமசிங்க,
வதுளைக் கச்சேரி, கவண்மேந்து ஏசண்டுக்காக.
1912 ம் ௵ மேமீ 24 ந் உ.

---

[Tenders for repairing the Salt Department Officers Quarters, &c., Southern Depot, Puttalam.]

*புத்தளம் தென் டிப்போவின் உப்பு டிப்பாற்மென் உத்தியோகஸ்தருடைய வீடுகளையும் காவல்காரர் சில்வா, கந்தன் உஸ்மானுடைய சுவர்களைக் கட்டவும் பழுதுபார்க்கவும் என்று மேல்உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி அரசாட்சி ஏசென்றுத்துரையவர்களால் 1912 ம் ஆண்டு ஆனிமீ 25 ந் திகதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

விபரம்.

*உழுத்ததும் பழுதானதுமான மரங்களையும் கிடுகுகளையும் எடுத்துப்போட்டு புதிய கிடுகுகளும் பெலத்த மரந்தடிகளும் போடப்பட வேண்டும். கூரைக்கு மேலாக பாரத்துக்கு பூட்டுகள் போடப்பட வேண்டும்.*

*கூரைகள் புதிய கிடுகினால் வேயப்பட வேண்டும். பழுதான ஓலைச் சுவர்களுக்கு புதிய கிடுகுகள் கட்டப்பட வேண்டும்.*

*சிறுப்பருடைய வீட்டின் சமையலறையின் சுவர்களை களிமண்ணினால் பூசிப் பழுதுபார்க்க வேண்டும்.*

*புதிய கதியலினாலும் கிடுகினாலும் வேலிகள் பெலப்பாக அடைக்க வேண்டும்.*

*சுவர்களுக்கு எங்கே தேள்வைப்படுகுதோ அங்கே களிமண்ணினால் பூசி இதற்கேலவே வெள்ளையடித்துவந்த இடங்களுக்கு புதிதாக வெள்ளையடிக்கப்படல் வேண்டும்.*

*கதவுகளுக்கும் யன்னல்களுக்கும் சிவப்பு நீந்தை பூசப்பட வேண்டும்.*

*உப்பு சிறுப்பருடைய வீட்டின் குசினிக்கும் கங்காணியினுடைய வீட்டிற்கும் புதிய கதவுகளிரண்டு போட்டு பழைய கதவையும் பழுதுபார்க்க வேண்டும்.*

*இரண்டாவது வீட்டின் குசினிக்கதவுக்கும் கங்காணியுடைய வீட்டின் குசினிக்கதவுக்கும் காவல்காரர் இச்சில், உஸ்மான் திசேராவினுடைய வீட்டின் குசினிக்கதவுக்கும் புதிய பூட்டும் துறப்பும் போடவேண்டும். தரையை களியால் ஒப்பரவுபண்ணி மொங்கான்போட்டு சாணகத்தால் மெழுக வேண்டும். காவல்காரக் கந்தனுடைய வீட்டின் முகட்டுச்சுவரை உடைத்து புதிய சுவர் கட்டவேண்டும்.*

*காவல்காரன் உஸ்மானுடைய வீட்டின் மேல்பக்கத்து சுவரைக் கட்டவும். மற்றும் சுவர்களை களிபூசிப் பழுது பார்க்க வேண்டும். காவல்காரன் சில்வாவினுடைய வீட்டின் எல்லாப் பக்கத்துக்கும் களியினால் சுவர் கட்டப்பட வேண்டும்.*

**கேள்விக்காரர் கவனிக்கவேண்டிய ஏற்பாடுகள்.**

1. *கேள்விக்காரர் 1912 ம் ஆண்டு ஆனிமீ 22 ந் திகதியன்று அல்லது அதற்குமுன் புத்தளம் கச்சேரியில் ரூபாய் 10 கட்ட வேண்டும். உதவி அரசாட்சி ஏசென்றுத்துரையவர்களால் நியமிக்கும் நியாயமான காலத்துக்குள் பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின பணம் அரசாட்சிக்குப் பறிமுதலாக்கப்படும்.*

2. *அறிவித்தல் அல்லது கடிதங்களை பெற்றுக்கொள்ளுகிறதற்காக கேள்விக்காரர் புத்தளத்தில் ஓரிட விலாசம் கொடுக்க வேண்டும்.*

3. *வேலைநடத்த முற்பணம் கொடுக்கப்பட மாட்டாது.*

4. *கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொண்டதென் றறிவித்தல் கிடைத்தபின் (ஏழு) 7 கிழமைக்குள் இந்த வேலையை செய்துமுடிக்க வேண்டும்.*

5. *இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரங்களை புத்தளம் உப்புத்துரையவர்களிடம் வினவி அறிந்து கொள்ளலாம்.*

ஈ. நீ. டயிசன்,
உதவி ஏசன்றுத்துரைக்காக.

புத்தளம் கச்சேரி,
1912 ம் ஆண்டு ஆனிமீ 4 ந் உ.